ரிஜிஸ்டர் நெ.—2197 போஸ்டாபீஸ் நெ. 346. டெலிபோன் நெ. 2583

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

Vol— பு—11 ஆசிரியர்:—திரு. சனக-சங்கர-கண்ணப்பர். இதழ்—12

சென்னை பிரபவ-ஹு ஆனி-மீ 3உ — 1927-ஹு ஜூன்-மீ 17உ வெள்ளிக்கிழமை

காந்தி மதப் பகைமை யூட்டு பவரைக் கண்டித்தல்

பால்கன் தீபகற்பத்தில் யுத்தம் நேரலாகும் போலு மோ?

"திராவிடன்"

பிராமணரல்லாதார் விடுதலைக்கு உழைப்பது.

கிடைக்கும் இடங்கள்.

திருநெல்வேலி.
திரு எம். சோமசுந்தரமவர்கள்
டி. பி. முருகவேல் அண்டு கம்பெனி, திருநெல்வேலி ஜங்ஷன்.

மதுரை
டி. சேதுராயுடு அவர்கள்
சித்திரைக்காரத்தெரு, மதுரை.

திருச்சினப்பள்ளி
எஸ். மாசிலாமணிப்பிள்ளை
"ஜஸ்டிஸ்" திராவிடன் ஏஜண்டு, திருச்சி.

கும்பகோணம்
வ. சி. இராமச்சந்திரம்பிள்ளை அவர்கள்
கும்பகோணம்.

மாயவரம்
எம் கல்யாண சுந்தரம் அவர்கள்
கதர் ஸ்டோர்ஸ், மாயவரம்.

தஞ்சாவூர்
சிவ. மாணிக்கவாசகம் பிள்ளை
கருந்தட்டாங்குடி தஞ்சாவூர்.

திருவாரூர்
வி. எஸ். இராமன் அவர்கள்
காரியதரிசி, தேசாபிமானசங்கம், திருவாரூர்.

நாகபட்டினம்
எம். டி. செட்டியார் அண்டு சன்ஸ்
நாகபட்டணம்

விருதுநகர்.
என். கோமதிசாயகம்பிள்ளை
சிவன் கோவில் தெரு விருதுநகர்.

திருவண்ணாமலை
வே. மு. சாமி செட்டியார்
ஆலயம் 10, குமரக் கோயில் வீதி, திருவண்ணாமலை.

காஞ்சிபுரம்
9. சு. மாணிக்கவாசக முதலியார்
ஆசிரியர், பச்சையப்பன் பாடசாலை, ராட்டன்பேட்டை, காஞ்சிபுரம்.

வேலூர்
ஏ. கணபதியா பிள்ளை
முனிசிபல் கவுன்சிலர், வேலூர்.

ஈரோடு
வே. வாசுதேவன்
"குடியரசு" ஆபீஸ், ஈரோடு

சேலம்
பெரியசாமி முதலியார்
முனிசிபல் கவுன்சிலர், அம்மாபேட்டை, சேலம்.

கோயம்புத்தூர்
ஏ. ஆர். சிவானந்தம்
437, பெரியகடை வீதி, கோயம்புத்தூர்

கொழும்பு
ஆர். பாலய்யா பிள்ளை
51, பிரின்ஸ்தெரு, கொழும்பு.

மேற்கூறிய இடங்களிலெல்லாம் நமது "திராவிடன்" கிடைக்கும். தனிப் பிரதி யொன்றுக்கு விலை அணு 0—0—6. மாதமொன்றுக்கு சந்தா ரூ 1—0—0 பிராமணரல்லாதார் யாவரும் தம் விடுதலைக்கு உழைக்கும், இப்பத்திரிகையை ஆதரிக்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இலங்கை ஆதித் திராவிட மகாநாடு.

சென்னை சட்ட நிருபண சபை அங்கத்தினர்

சுவாமி சகஜானந்தம் அவர்கள்.

நிகழ்த்திய சொற் பெருக்கு.

சகோதர சகோதரிகளே! இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டதற்காக யான் உங்களனைவருக்கும் எனது கனிந்த நன்றியறிதலான வந்தனங்கூறுகிறேன்.

அவைக்கண் முந்தியிரு (தலைமை வகி)ப்பார் குணங்கள் எட்டாம். அவையாவன:—குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அவாவின்மை, அழுக்காறின்மை என்பனவாம். அவை 'எட்டு வகை நுதலிய அவையத் தானும்' என்னும் தொல்காப்பியச் சூத்திர உரையாலும் "குடிப் பிறப்பித் தப்பணுவல் குடி விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற வாய்மை வாய் மடுத்து மாந்தித் தூய்மையிற், காதலின் பந்தம் இத்தரு நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும், அழுக்காறின்மையவா அவின்மையென, இருபெருநிதியமுமொருதாமீட்டுக் தோலாநாவின்மேலோர் பேரவை எனனும் புறத்திரட்டு ஆசிரியமாலையானும் அறியக்கிடக்கின்

[illegible]

புறநானூற்றில் ஒரு செய்யுள், கருங்கால்வரவே இருங்கதிர்த் தினையே, பொதிகைரவரையோடு கொள்ளென நான்கே, பாணன் பறையன் துடியன் கடம்பன் இந்நான்கல்லது குடியுமில்லை, என்று கூறுகிறது. இச் செய்யுளால் ஏனைய மக்கள் குடிபுகுமுன் இந்நான்கு குடிகளே பழந்தமிழ் குடிகளாக இருந்தவர்களெனப் புலப்படுகிறது. இவருள் பாணரென்போர் இராஜமகேந்திர புரத்துப் பக்கங்களில் இருக்கிறார்களெனக் கேள்வி. துடியரென்போர் நீலகிரி முதலிய மலைப் பக்கங்களிலுள்ள தொடுவர்களாயிருக்கவேண்டும். கடம்பர் வேடுவர்கள். இப்பதங்களுக்கு மற்றும் பாணர் பாட்டுப் பாடுபவர், பறைர் பறையடிப்பவர், துடிதர் உடுக்கையடிப்பவர், கடம்பர் கொம்பூதுவரெனவும் பொருள் கொள்ளலாம். இந்நால்வருள் பறையரொழிய ஏனைய மூன்று குடிகளும் அவர் மிகவும் அருகி இருக்குமிடம் அறியக்கூடாத நிலைமையிலிருக்கிறார்கள்.

[illegible]

ம் தலைமேற் கொண்டுள்ளாரென்பது யாவருமறிந்ததேயாம்.

ஔவையாரென்னும் பெருமாட்டி கூறியுள்ள நீதிநூலின் திறத்தை வியவாதார் யார்? இவர்கள் அரசியலை பாகுபாடு செய்து இத்துணை நன்றாகக் கூறியிருப்பதால் இவர்கள் எங்ஙனமே அறம், அரசியல் முதலிய துறைகளில் எவ்வாறு பயின்றிருத்தல் வேண்டுமென்பவை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்.

பண்டைய காலத்தில் இவர்கள் "கொடிநிலை கந்தழிவள்ளி யென்ற வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும் கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கிணங்க சூரியன், சந்திரன், கடவுள் என்ற மூன்றையும் வழிபட்டு வந்துள்ளார்கள். கொடிநிலை வள்ளியென்பவை சூரிய சந்திரர்களாம். கந்தி என்பது பற்றுக்கோடு அதாவது சார்பென்பதாம். அழி என்பது அழிந்ததென்பதாம். எனவே சார்பற்றது எதுவோ அதுவே கடந்த பொருளாம். தேகாபிமானம் அற்றவிடத்து உள்ளேகாணும் பொருளாம். ஆகவே பற்றற்றானை வணங்கி வந்தார்களென்பதாம். "சார்பினுற்றேன் றுந்தானருவாயெப்பொருட்கும் சார்பெனநின்றெஞ்ஞான்று இன்பந்தகைத்ததேரோ என்பதற்கிலங்க தானே சார்பாயுள்ளதெதுவோ அதுவே மெய்ப்பொருள் உள்ள பொருள். செம்பொருள் உலகமுதல் என்னும் நாமங்களால் அழைக்கப்படும் பொருள். இது பற்றியே திருவள்ளுவரும் வெவ்வேறு உருவமுடையத்தெய்வப்பெயர்களை கூறாமல் மேலே காட்டிய நாமங்களாலேயே அழைத்துள்ளார். ஆனால் தற்போது ஆங்காங்குள்ள சேரிகளில் சத்தியாலயங்களே காணப்படுகின்றன. கந்தழியை வணங்குவது எங்கே? அதற்கு ஆலயங்களெங்கேயென வினவுவோமெனின், கந்தழியென்பது சர்வப்பற்றுக்களும் அற்றவிடத்து அறிஞர்களால் அகக்கண்ணாலறியப்படும் அறிவுப்பொருள். அது அறிஞரல்லாத ஏனையர்க்குப் புலப்படாததாலாலும் அதன் வணக்கத்தால் இவ்வுலகப் பயன்கள் எளிதாகப் பெறமுடியாவாகலாலும், அதனது சத்தியம் லத்தைப் பெற்றே ஏனைய தெய்வங்கள் பெருஞ் சக்திமான்களாகக் காணப்படுதலாலும் சக்தியம்ஸம் பெறாதவிடத்து யாதொரு செயலும் நடைபெறுவாதலாலும் எல்லாப் பயன்களையும் தரவல்ல சக்தியையே தாயெனக் கொண்டு ஆலயங்கள் அமைத்து வணங்கி வருகிறார்கள். அன்னையானவள் தாதைக்கும் அதிகம் என்ற கொள்கையாலும் மக்களுயிரொழிந்த ஏனைய உயிர்கள் பசுபட்சிகள் பெரும்பாலும் தந்தையைக் காணாராகி தாயின் பாலைப்பருகி தாயின் அன்பைப்பெற்று நிலவுதலாலும் ஆதித்திராவிடர்கள் சக்தியைத் தாயின் வடிவமாகக் கொண்டு வணங்கி வருகிறார்கள். சேரிகளில் இக்காரணம் பற்றியே சக்தியின் முதன்மை பெற்றவுருவங்களாகிய மாரியம்மன் பிடாரி முதலாக தேவியின் ஆலயங்கள் அமைத்துள்ளார். தில்லைமாகாளி பிடாரிமுதலியபெரிய தேவிகளுக்கு விழாத்தனுமிடத்து ஆதித்திராவிடர்கள் காப்புக்கட்டிக் கொள்ளுகிறார்கள், இச்செயல் சக்தியையே தெய்வவடிவங்களில் முதலில் கண்டு வழிபாடு செய்தவர்கள் இவர்களே என்பதைக் காட்டுறது. மேலே கூறிப் போந்த செயல்களைக் கொண்டு ஆதிதிராவிடர்கள் பண்டைய காலத்தில் அறிவு, ஒழுக்கம் ஆலய வழிபாடு, அரசியல் முதலியவற்றில் சிறப்புற்றிருந்தார்களென்பது வெள்ளிடை மலையாம்.

பழந்தமிழ்க் குடிகளில் சிலர் கந்தழியினின்றும் தோற்றிய நாமரூபங்களோடும் கூடிய பவுதிக உலக இயற்கையில் கந்தழியின் அம்சவடி உண்மை அறிவு ஆனந்தங்களைக் கண்டும் பெயர் உருவங்களை சக்தியின் அம்சங்களாகவும் கண்டு வந்திருப்பாராயினர். ஒரு சிலர் உண்மையறிவானந்தத்தோடு கூடியநாமரூபங்களை கடவுளின்வடிவங்களாகக் கண்டு இயற்கை வடிவங்களிலேயே வழிபாடு செய்வாராயினர். என்றுமாறாத இயற்கை இன்பமே அழகு வடிவமாம். கந்தழியே முருகக் கடவுளென்றும் அவனே சர்வசக்திமானென்றும், அதற்கடையாளமாகவே சக்தி வேலை கையிற்றாங்கி யொளிர்கின்றானென்றும் கண்டு, பழந்தமிழ்க் குடிகளில்ஒருபகுதியாகியவள்ளுவர்

முருகனுக்கு ஆலயங்களமைத்து வழிபட்டு வருகின்றனர். ஒரு பகுதியார் சத்தி மாத்திரத்தைப்பிரதானமாகவும் ஒரு பகுதியார் சத்திமானோடு கூடிய சத்தியை பிரதானமாகவும் ஒரு பகுதியார் இயற்கை வடிவமாகவும் கடவுளைக் கண்டு வழிபடுவராயினர்.

பழந்தமிழ் மக்களின் இடைக்கால நிலை

ஒரு சமூகம் இன்பகரமாக வாழுமிடத்தில் வேறோர் சமூகம் குடிவரினால் முன்னிருந்தசமூகம் ஆற்றலுடையதாயின் போராலோ சூழ்ச்சியாலோவனையச்சமூகம் வரவொட்டாமல் தடுக்கக்கூடும். இல்லையேல் வந்த சமூகத்தை எத்துணையளவு புறக்கணிக்கக்கூடுமோ அவ்வளவும் புறக்கணித்துவிடும். வந்த சமூகம் வலிவுடையச் சமூகமாயின் முன்னிருந்த சமூகத்தை அடியோடு பாழ்ப்படுத்தி விடும். சரண்புகுந்தால் தமக்குக் கீழ் தம்பிஷ்டம் போல் நடக்கும்படி செய்யும். இம்முறையில் ஆரியர்கள் குடியேறிய போழ்து, பழந்தமிழ்க் குடிகள் அவர்களை எதிர்க்கக்கூடாமல் அடங்கியும் முன்னர் சுயஉரிமையோடு வாழ்ந்து வந்த எண்ணத்தால் தம்மைத்தாமே காத்துக்கொள்ளுதற்கு ஏனையரோடு சேராது முன்போல் ஜனுங்கமாகவே வாழ்ந்து வந்தார்கள். தங்களது பழயவழக்கவொழுக்கங்களையே கடைப்பிடித்து வந்தார்கள். தங்களுக்கு மாறுபாடான சில வொழுக்கங்களை இவர்கள் கைக்கொள்ளாது விடுத்தனர். ஏனைய மக்கள்போல் ஆரியரைப் பின்பற்றாது நின்றனர்.

அக்காலங்களில் ஆரிய சமூகத்திற்குள்ளும் பிறப்பையொட்டி ஜாதியென்பதிருந்ததில்லை. அது வேத சம்பந்தமன்று, அரசியல் சம்பந்தமாகவேற்பட்டக் கட்டுபாடேயாம். வைதீகத்தின்மீது பழி கூறுதல் தவறு. ஆதித்திராவிட சமூகத்தில் தோன்றிய அருந்ததியென்னும் கற்புடைய மணியை பிரமபுத்திராகிய வசிட்டரோன்னும் அந்தணர் மணந்தனர். அவர் திருக்குமாரர் சத்திமுனிவர் பறைக்குலப் பெண்ணை மணந்து பராசரமுனிவரை ஈன்றனர். பராசரமுனிவர் பரதவக்குலத்து மகளாகிய பரிமளகந்தியை மணந்து வியாசரைப் பெற்றனர். இவ்வாறுபல சரித்திரங்கள் நிகழ்ந்துள்ளன. ஈண்டு தாயின் குலத்தைக் கவனித்தல் வேண்டாம். தந்தையர் அந்தணர். அவர் தம் வித்திக்குப் பிறந்தவர் அந்தணரே. எந்தநிலத்தில் எந்த வித்து இடப்படுகின்றதோ அந்த நிலத்தில் அந்த வித்துதான் முளைக்கும் வேறொன்று முளையாது. அது போல் அந்தணரின் தந்தையர் குலத்தையே கவனித்தல் வேண்டுமெனின்? "தாயையன்றி மக்களுக்கொரு பிறவியும் ஜாதியும் வேறுண்டோ"? என்று சுருதி கூறுகின்றது. திருதராட்டிரன், பாண்டு, விதுரர், வாருசி, விக்கிரமாதித்தன், பட்டி, பர்த்திருஹரி முதலானோரிடத்துத் தந்தை வம்ஸம் கவனியாமல் தாய் வம்ஸமே கருதப்பட்டிருக்கின்றது. தாய் வம்ஸம் கருதினால் வசிட்டர், சத்தியர், பராசரர், வியாசர், முதலானவர்கள் எந்தக்குலத்தினராதல் வேண்டும், மக்கள் வயிற்றிற்றோன்றாது அஃறிணைப் பொருள்களில் பிறந்தவர்களும் அந்தணராய் விளங்கியிருக்கின்றனர். ஆன்மகன், நரிமகன், குதிரை மகன், கரகமகன் தர்ப்பைமகன் இவர்கள் அந்தணராயிருந்தமை பிரசித்தம். அந்தணவகுப்பிற் பிறந்ததும் பரசுராமர், துரோணர், கிருபர், அஸ்வத்தாமர், முதலாயினோர் அரசதருமத்தைக்கடைப்பிடித்தனர் அரசவகுப்பிற் பிறந்த விசுவாமித்திரர் அந்தணராயினர். அந்தணர்க்குப் பிறந்த திருதராட்டிரன் பாண்டு விதுரர் இவர்கள் அரசர்களும் சூத்திருமாயினர். இவ்வாற்றால் பண்டையக் காலத்தில் அந்தணராயிருந்தவர் எக்குடியிலும் பிறந்தனர், எல்லா வகுப்புப் பெண்களையும் மணந்தனர்; யாவரோடும் எவ்விதஉணவையும் உண்டனர். அக்காலத்தில் அவர்களுக்குள்ள இயல்பான குண செயல்களைக் கண்டு இவர் இன்னவருணரென நிச்சயிப்பவராயிருந்தனர். ஆகவே ஜாதிக் கொடுமைகள் வேத சம்பந்தமானவையன்று. மக்கட்டொகுதிக்கு இன்றியமையாத் தொழில் எவ்விதத் தொழிலாயினும் அவற்றுள் ஒன்றை இழந்தினால் எல்லா மக்கட்கும் கேடுண்டாமெனத் தெரிந்து தொழிலால் உயர்வு தாழ்வு கருதாது தொழிலுக்கேற்ற எந்த வகுப்புக்கும் சம உரிமையே வழங்கிவந்தனர். குண கர்மங்களைக் கொண்டு பாகுபாடிருந்ததேயொழிய பிறப்பினால் பாகுபாடில்லை; உயர்வு தாழ்வுமில்லை. ஆகவே அவரவர்கள் குண கர்மத்திற்கேற்ப தொழில்களைச் செய்து சுகமாக வாழ்ந்துவந்தனர். பின்னர் உயர்ந்த தொழில்செய்பவர் மேலோரெனவும் தாழ்ந்த தொழில்செய்பவர் இழிந்தோரெனவும் தொழிலில் உயர்வுதாழ்வு கண்டு சில செயல்களை தாழ்ந்தவைகளென அவைகளின்மீது வெறுப்புக் கொள்ளும் காலம் வந்தது. அது சமயம் இழிந்த தொழில் செய்வதற்கு ஆள்வேண்டுமேயென அரசாங்கம்கருதி இந்தியாவின் பழங் குடிகளையும் குடியேறியவர்களோடு கலவாதிருந்த ஆதித்திராவிடர்களை இழி தொழில்களைச் செய்ய வேண்டுமென வற்புறுத்தத் தலைப்பட்டது. அவர்கள் மறுத்தனால் அவர்களை தாழ்ந்தவர்களென்றும் தொடக்கூடாதென்றும் இறந்த மாடுகளையே[...]ண்டுமென்றும், இறத்தமாடுகளை[...] அவசிய புத்தி தோன்றும்படி இற[...] மாடுகளின் புலால் யுண்ண வே[...]மென்றும் வற்புறுத்தப் பட்டனர் இ[...] கருத்தைக் கொண்டே ஞான வெட்[...]யானென்னும் ஆசிரியர் ஜாதி கு[...] வேற்றுமை என்னும் பாட்டில் 'மாலை[...] பறையனென்றே சோன் சோழனு[...] மாடுகள் செத்ததை வாரதிந்தே பதை, போல மென்றே சதை யுண்ணும்படி செய்தார். ஒகோ பாவிகளுற்பத்திக் காண்கிலர். ராஜாங்கஞ் செய்த நடத்தையிதின் [குறி]வேதாகமத்தில் விரித்த வாலல்லகாண் ஆசாரமல்ல. என்று கூறுகின்றார். இதனால்தொழில் பற்றி உயர்வுதாழ்வென்னும் எண்ணம் இந்நாட்டிடைத் தோன்றியபோது தமது கொள்கைகளை மேற்கொள்ளாத தமிழரை வற்புறுத்தி இழிதொழில் செய்யும்படி செய்து அதனைப் பிறப்புரிமையாகக் கொள்ளும்படி அரசாங்கம் செய்தது. இச்செயல்வைதிகச் செயலன்று வைதிகமாயின்மேற்கூறியபடிஎல்லா வகுப்புகளிலும் அந்தணர் முதல் எல்லோரும் தோன்றுவதும் எந்த வகுப்புப் பெண்களையும் மணப்பதும் உண்பதும் அனுபவத்தில் வந்திரா பழைய நூல்களும் கூறுது. ஆதலால் அரச தந்திரமே யொழிய வேறன்று, தொழிலைப் பிறப்புரிமையாக்கிய பின்னர் அக்கொள்கைகளை சில வைதிக நூல்களிலும் புகுத்துவாராயினர். அரசாங்க சட்டமாகிய ஸ்மிருதிகளில் கடுமையாக எழுதிவைத்துள்ளார்கள் இக்கொள்கைகள் பழையவழக்கவொழுக்கங்களையும் நூல்களையும் கவனிப்பவர்களுக்குத் தோன்றுமலிராது. ஸ்மிருதிகள் காலத்திற்கேற்ப மாறிவருவதற்குரியென நம்மையோடுக்கியது பழய அரசாங்கங்களே.

அரச தந்திரம் ஒரு தலை வாழ்வாக முடிந்தது.

வகுப்பு வேற்றுமைகள் ஏனைய மக்களுக்கு இடையூறாக முடிந்தது. ஆதித்திராவிடமக்களை இழிந்த தொழில்களைச் செய்யும்படி வற்புறுத்திய காலத்தும் அவர்கள் முஸ்லிம் ஐரோப்பியர், சீனர் ஜப்பானியர்போல் ஜாதிக்கட்டுபாடுக்கு அகப்படாமலே இருந்துவந்தனர். அதனால் பழந் தமிழ்க் குடிகளை நான்கு வருணங்களிலும் சேர்க்காமல் விடுத்தனர். முஸ்லீம்களை ஐரோப்பியர்களை நான்கு வகுப்புக்களில் சேர்க்க இடமுண்டா? இல்லையே. அம்முறையை மிகப்பண்டையகாலத்திருந்து தங்கள் கொள்கைகளை ஆதரியாமையால் நான்கு வருணத்திற்குள் இவர்களுக்கு இடமில்லாமல் போயிற்று. நான்கு வருணத்தவரும் பிரமாவின், முகத்தில் தோன்றியவர் பிராமணர். வயிற்றில் தோன்றியவர் வைஸ்யர். காலில் தோன்றியவர் சூத்திரர்களாவரென வருணவேற்றுமையை பிறப்புரிமையாக்க கதைகளேற்பட்டுவிட்டன. பின்னர் நான்காவது வகுப்பினராகிய வேளாளர்கள் சூத்திரர்களெனப்பட்டு இவர்கள் வேதம் ஓதுதல் கூடாதெனவும், ஏனைய மூன்று வகுப்பினருக்கும் வேலைகள் செய்தலேபுருஷார்த்தமெனவும் வேதங்களை படித்தால் கண்களைப்பிடுங்கவேண்டுமென்ற நிலைமைக்கு வந்துவிட்டது.

தன் வினை தன்னையே சுடுதல்

பின்னுஞ் சிலநாள்கள் கழிய பெண் மக்களுக்குச் சுதந்திரமற்று போகும் நிலைமை வந்துவிட்டது. ஸ்திரீஸூத்திராநதீயதாம். ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் சொல்லாதே என்று சுருதி வைத்துக்கொண்டனர். ஒரு தலைவன் செய்யும் காரிய குறையையோ அறக்குறையையோ தனது வேலைக்காரன் தனக்குச் சொன்னால் தனக்கு அவமானமாயிருக்கும், அதனால் வேலைக்காரனாகிய சூத்திரன் படிக்கக்கூடாதென்றனர். பெண்பிள்ளை தனக்கு புத்திபுகட்டினால் அதுவும் தலைவனுக்கு அவமானந் தருவதாகக் கருதினார்கள். அதனால் பெண் மக்களுக்கு வேதங்களைச் சொல்லக்கூடாதென்றனர். சுயகாரியம் கருதிவேலைக்காரனையும் மனைவியையும் படிக்கக்கூடாதெனத் தடுத்தார்கள். அறத்துணையாக வரக்கூடிய தனது மனைவியும் படிக்கக்கூடாதென சாத்திரம் செய்திருந்தால் இதைவிட வேறு கொடுமையும் வேண்டுமா? சுயகாரியம் பற்றி மனைவிகளையும் மரமாக்கினால் அவர்களது அறிவைக் கெடுத்தால் மற்றையர்களின் நிலைமையைப் பற்றி என்ன சொல்வது. அந்தணர் வீட்டுத் தாய்மார்கள் சூத்திரப் பெண்களாம். ஆச்சரியம், ஆச்சரியம்.

ஜாதிக்கொடுமைகள் தோன்றுவதன் முன்னர் பெண்களின் நிலைமை.

யாக்ஞவல்கிய முனிவர் தமது மனைவிமார்களுக்கு வேதாந்தியானம் செய்து வைத்தார். அப்பெண்மணிகள் மகாஞானிகளாக விளங்கினர். இது பிருகதாரண்ய உபநிஷத்தில் பிரசித்தம். யாக்ஞவல்கியர் துறவாசிரமத்தை மேற்கொண்டு ஜனகராஜாவின் சபைக்குச் சென்றார். அக்காலைகார்க்கி, மைத்திரேயி என்னும் பெண்மணிகளும் திறந்த அவதூத (திருவாணை) சந்நியாசிகளாய்த் தமது நாயகனும் குருவுமாகிய யாக்ஞவல்கியர் சென்றிருந்த ஜனகராஜாவின் சபையை அடைந்தனர். ஜனகராஜாவின் சபையிலுள்ள அந்தணர்கள் திருவாணிகளாகிய பெண் ஞானிகளை பார்த்து நாணி தலையைக் கீழேகவிழ்த்துக் கொண்டனர். அது போழ்து இவ்விருவரும் ஜனகரைப் பார்த்து மகாராஜாவே இந்த சக்கிலிகளை உமது சபையில் எப்படி சேர்க்கலாமென்று கேட்டார்கள். திடஞானியாகிய ஜனகர் அப்பெண்மணிகளைப் பார்த்து இம்முனிவர்கள் எப்படி சக்கிலிகளானாரென்று கேட்டனர் அப்பெண்மணிகள் கூறுவதாவது இவர்கள் எங்களைக் கண்டவளவில் தலையைக் கவிழ்ந்தார்கள். எந்த நாட்டங்கொண்டு தலையை கவிழ்ந்தார்கள். தோல் நாட்டம் கொண்டல்லவா தோல்நாட்டம் யாருக்குரியது? சக்கிலிகளுக்கல்லவா? தோல் நாட்டங்கொண்ட இவர்களை நாங்கள் சக்கிலிகளாகக் கருதுகிறோமென்றனர். கார்க்கிமைத்திரேயி யாக்ஞவல்கியர் சம்வாதம் வேதத்தில் வெகு பிரசித்தம். பெண்மக்கள், வேதங்களை படிக்கக்கூடாது என்று சட்டம் ஏற்படுத்துவார்களானால் யஜுர், வேதத்திலேயே இப்பெண்மணிகளின் கதை வருகிறது. இக்கதையை யாரும்மறைத்துவிட முடியாது. வாசிட்டத்தில் சிகித்துவசன் மனைவி சூடாலையென்னும் பெண்மணி தனது நாயகனுக்குக்குருவாகவிருந்து போதித்துள்ளார்கள். பிரபுலிங்கலீலையில் அக்கமாதேவியென்னும் மாது சிரோன்மணி அவதூத சந்நியாசியாயிருந்து அல்லமப்பிரபு தேவரைக் குருவாக அடைந்தார்கள். இவ்வாறு பெண்மணிகள் சரிதங்கள் பலவுள. இத்துணைச் சிரேட்டமாகவிருந்த பெண்கள் படிக்கக்கூடாதெனச் சட்டம் வந்தகாலம் எத்துணை கொடுமையான காலமாகவிருந்திருத்தல் வேண்டும்.

சூத்திரர்கள்

நாளடைவில் வேதம் படிக்கக்கூடாதென சாத்திரம் எழுதிவைத்தார்கள். ஆனால் ரைக்வர் என்னும் சூத்திரர் வேதம் படித்திருந்ததாக வேதக்கதையிலேயே வருகிறது. யாரைப்படிக்க கூடாதெனச் சட்டம் செய்தார்களோ அந்தப் பெண்மணிகள் சூத்திரர்கள் கதைகள் வேதத்திலேயே இருக்கின்றன. வேதங்கள் தோன்றுமுன் இவர்கள் சரித்திரங்கள் நடந்திருக்கவேண்டும். இல்லையேல் வேதத்தில் இக்கதைகள் வருவதற்கு என்ன நியாயமிருக்கிறது? நாளடைவில் இவர்கள் ஆலயங்களில் சுவாமி சமீபத்தில் சென்று வழிபடக் கூடாதெனவும் பிராமணர்கள் மூலமாகவே வழிபடல் வேண்டுமெனவும் பிறப்புமுதல் மோட்சம்வரை அவர்கள் இஷ்டம்போல் நடக்க வேண்டுமெனவும் சட்டமுண்டாகிவிட்டது. இவர்களுக்கு கடவுளை வணங்குதலாகிய தவமுஞ் செய்யக்கூடாது இராமாயணத்தில் சம்புவனென்னும் சூத்திரன் தவம் செய்தானும் அதனால் ஓர் பிராமணன் குழந்தையிறந்துவிட்டதாம். இது தமது பகைவனுக்கு அந்தஸ்துண்டானால் தன் வீட்டில் சாவு உண்டானதற்குச் சமானமான அழுக்காற்றைக் காட்டுகிறது. வேதியர் வார்த்தையைக் கேட்டு இராமர் சம்புவனைக் கொன்றாராம். இந்தக் கதை ராமர் சரிதைக்கு முற்றும் மாறாகவே இருக்கிறது. கரடிகளையும் குரங்குகளையும் வேடர்களையும் அரக்கர்களையும் சகோதரராகக் கொண்ட பெருமான் வாலிவதத்தில்,

"தக்கவின்னதகாதன வின்னவென்
றொக்கவுன்னலராயின் உயர்ந்தவெ
மக்களும் விலங்கே மனுவின்னெறி
புக்கவேல்ல விலங்கும்புத்தேளிரே"

"இனையதாதலின் எக்குலத்து யாவர்க்கும் வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்," என்று கூறிய ராமர் மீது பழியைக் கற்பிக்கும்படி கற்பனையாக இக்கதை சொருகப்பட்டிருக்கிறது. இன்னோரன்ன கதைகளையும் எழுதி ஆங்காங்கு சேர்த்து சூத்திரர்கள் எவ்வழியாலும் அடக்கப்பட்டார்கள். இவர்கள் நிலைமையே அங்ஙனமாயின் அவர்கள் கொள்கைகளை மேற்கொள்ளாத பழந் தமிழர்களின் நிலைமையைப்பற்றி என்ன சொல்வது.

ஐந்தாம் வகுப்பு,

பழந் தமிழருக்கு வேதங்களில் பிறப்பிடம் கூறுமலும் சாத்திரங்கள் இடந் தராமலும் போயின. இவர்கள் பிராமணர்க்கும் சூத்திரர்க்கும் பிறந்தவர்கள் அனுலோமர் பிரதிலோமர் என்றால் சிலராயிருக்கலாம். ஆறு கோடி ஜனங்கள் எவ்வாறு வந்தனர்? அவ்வாறு மேல் ஜாதிகளும் கீழ் சாதிகளும் சேர்ந்து இத்துணை பெரியசமூகம் வந்ததென்றால் உயர்ந்தவர்களின் படிற்றொழுக்கம் எவ்வளவாயிருந்திருக்க வேண்டும். இது அவர்களை இழிவுபடுத்துகிறது. அல்லது ஐம்பெரும் பாதகங்கள் செய்தவர்களென்றால் இப்பொழுது ஐம்பெரும் பாதகங்களைச் செய்து வருகிறார்களா? செய்தார்களென்று எங்கேனும் சரித்திரமுண்டா? இது முழுவதும் கற்பனை ஆகவே சுவாதீனமாயிருந்து அவர்களால் ஒதுக்கப் பெற்று தனித்திருந்தவர்கள். இவர்களுக்கு ஜாதி பிரிவினை பிறப்பாலில்லை. இவர்கள் ஆங்கிலேயர் முஸ்லீம்கள் மலேயர் போன்ற தனிப்பட்ட ஜாதியாக விருந்தமையின் இவர்கள் நான்கினும் அடங்காமல் ஐந்தாம்வகுப்பென்று அழைக்கப்பட்டு வந்தனர்.

பிறப்பை யோட்டிய வைதீகத்தால் வரும் கேடு.

இவ்வாறு பிறப்பையோட்டி உயர்வு தாழ்வுகற்பித்த பின்னர் உயர்ந்த வகுப்பிற் பிறந்தவர் ஒருவர் தாம் எத்துணை பாவங்கள் புரியினும் உயர்ந்த வகுப்பிற் பிறந்த ஒரு காரணங் கொண்டே அவர் உயர்ந்தவராகின்றார். தம்மைத் தாழ்த்துவாரில்லையென்னுங் கருத்தால் தாமச குணத்தினராகி தாமச ஒழுக்கங்களை மேற்கொண்டார் பலர். தாழ்ந்த வகுப்பிற் பிறந்தவரொருவர் அறிவு வொழுக்கங்களால் எத்துணைச் சிறந்தாராயினும் அவர் பிறந்த வகுப்பு ஒன்றைக் கொண்டே உயர்தற்கிடமின்மையின் தங்கள் ஒழுக்கத்தால் கண்கூடாகக் காணக் கூடிய இந்த உலகில் யாதொரு பயனையும் அடைய முடியவில்லையென சிலர் தங்கள் நல்லொழுக்கங்களை விடலாயினர். பண்டைக்கால முதல் உயர்ந்த வகுப்பினரென்போர் தமக்குரிய தர்மானுஷ்டானங்களில் வழுவதுசெய்து வந்தார்கள் தற்போதும் பலர் செய்து வருகின்றனர் ஆயினும் ஒழுக்கத்தில் வழுக்கினோரைத் தாழ்ந்தவர்களாக ஆக்காமையால் உயர்ந்த வகுப்பில் சிறந்த சிலரது ஒழுக்கக் கேட்டிற்கு அவர்களது பிறப்பையொட்டியேதாழ்வு அவர்களைத் தடுக்கின்றமையின் ஒழுக்கந்தவர்க்கு பிறப்பை யொட்டிய தாழ்வே காரணமாயிருக்கிறது. ஆகவே பிறப்பை யொட்டிய வைதிகம் ஒழுக்கத்தை நோக்கவில்லை. கேவலம் பிறப்பு மாத்திரத்தையே நோக்கி நிற்கிறது. ஒரு வகுப்பினர்க்கு மாத்திரம் உயர்வுகொடுக்கின்றது; சுதந்தரம் தருகின்றது ஆனால் அது அவர்களது இழுக்கத்தை தடுக்கவில்லை. ஆதலால் ஒழுக்கந்தவறுபவர் அனைவருக்கும் தற்போதுள்ள பிறப்பையொட்டிய உயர்வேதியவொழுக்கத்திற்கு துணையாயிருக்கிறது. எக்குடி பிறப்பினும் 'ஒழுக்கம் விழுப்பந்தரும்' 'இழுக்கம் இழிந்தபிறப்பாய் விடும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக்கெடும் என்னுந் தமிழ் மறையின் பொன்மொழிகளை சட்டமாக மேற்கொள்வாராயின் யாவரும் பிறப்பின் பயன் கெடுமென ஒழுக்கந்தவற அஞ்சுவர் விழுப்பங்கருதி மேற்கொள்வர். கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம் பவுத்தமதம் முதலிய புறச்சமயங்கள் தம்மை நாடிவருபவர் யாவரேயாயினும் எதிர்கொண்டு கூவியழைக்கின்றன. இடந்தருகின்றன, உயர்த்துகின்றன. யாவரையும் சகோதரர்களாக கருதுகின்றன. பிறமதங்களும் சனாதன தர்மமென்னும் நமது வைதிகத்திற்கும் இத்துணை வேறுபாடுகளுள்ளன. நம்சமயம் நீடித்து வாழுதற்கு நமது சகோதரர்களை அந்நிய சமயங்களுக்குத் தம் செய்யாதிருப்பதற்கு தற்போது வைதிகத்தை பிறப்போக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் என்பதற்கிணங்கத்தக்க பெரியோர்கள் திருத்துவார்களாயின் அது நமது பாரத நாட்டிற்குச் செய்த தொண்டாகும்

(தொடரும்)

"வரதராஜுலு அறிக்கை"

—:o:—

ராமசாமியின் சமாதானம்.

II

மேல்கண்ட தலையங்கமிட்டு சென்ற வாரம் நான் எழுதிய விஷயங்களுக்கு மறுபடியும் 6-6-26 தேதி தமிழ் நாடு பத்திரிகையில் பதில் எழுத முகத்தான் சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அப்பதிலில் தன்மையைப்பற்றி விவகரிக்கு முன்பாக அப்பத்திரிகை எதாவதொரு சமாதானம் எழுத முன்வந்ததற்காக அதைப்பாராட்டுவதுடன் மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இதுவரை ஒருபத்திரிகையாவது காங்கிரசைப்பற்றி இவ்வளவு நாளாக நான் எழுதிக் கொண்டு வந்த விஷயங்களுக்கு பதில் என்பதாக ஒருவரி கூட எழுத முன் வராமல் வழக்கம் போல் தங்கள் தங்கள் "தேசாபிமானப் பிரசாரத்தை" நடத்திக் கொண்டும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை வைது கொண்டுமே வந்திருக்கின்றன. ஆனால் காரைக்குடி "ஊழியன்" பத்திரிகை கூட ஒரு சமயத்தல் நம்மைப்பற்றி "சுயமரியாதை பிரசாரம் செய்வது தேசத்திற்கு ஆபத்து," என்று மாத்திரம் எழுதிற்றே அல்லாமல் காங்கிரசைப் பற்றி நாம் எழுதியதற்கு பதில் ஒன்றும் எழுதவில்லை "தமிழ்நாடு" துணிந்து எழுத முன் வந்து விட்டதால் இனி ஒரு சமயம் எல்லாப் பத்திரிகைகளும் எழுத முன் வந்தாலும் வரலாம். ஆனாலும் இம்மாதிரி யாராவது சமாதானம் சொல்ல வருவதின் மூலமாகத் தான் அவ் விஷயங்களை இன்னமும் பாமர மக்கள் நன்றாய் அறியும்படி செய்ய சவுகரியங்கள் ஏற்படும். இல்லாவிட்டால் ஒரு தலைபக்ஷமாக நான் எழுதுவதாய் பிறர் நினைக்க எது உண்டாகலாம், அதனால்தான் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டேன்.

பதில் எழுத முன்வந்த "தமிழ்நாடு" பத்திரிகையானது நான்எழுதிய சமாதானங்களை தனது பத்திரிகையில் எடுத்துப் போட்டு முறையே நான் எழுதிவருவது போல் எழுதியிருந்தால் அது இன்னமும் கொஞ்சம் பாராட்டத்தக்கதாக இருந்திருக்கும் என்பதுடன் எனது சமாதானத்திற்கும் நியாயம் செய்ததாகும் அப்படிக்கில்லாமல்,

"குடிஅரசு" சமாதானத்தைப் பார்த்து எந்த தேசியவாதியும் வருந்தாமலிருக்க முடியாது" என்றும் "இம்மாதிரி ஒரு தேசத்திற்குரிய பெரிய தேசிய ஸ்தாபனத்தை முறைதவறிப் பழித்துவிட விரும்பினால் இதை யார்தான் சகித்துக்கொண்டிருக்க முடியும்" என்றும் வீரசர்ஜனை செய்து எழுதியிருக்கிறது. சாப்பாட்டுக்கு பந்தியிலே உட்காரக்கூடாது என்று தடைப்படுத்தப்பட்ட ஒருவன் இலை ஓட்டையாயிருக்கிறது என்று சொல்லுவதில் என்ன பிரயோசனம். அதுபோலவே 'தேசியம்' என்பதும் 'தேசிய ஸ்தாபனம் என்பதும் அஸ்திவாரத்திலிருந்தே புரட்டு என்னும்சிலர் வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகத்திற்குமென்றே ஏற்பட்டதென்றும் நமது நாட்டு பெரும்பான்மையான மக்களான அதாவது 100க்கு 90 பேர்களுக்கு மேற்பட்ட ஜன சமூகத்திற்கு கொஞ்சமும் நன்மை சபத்தக்கதல்லாததோடு பெருங் கெடுதி தரத்தக்கதென்றும் நான் கணக்குப் புள்ளிகளுடன் விளக்கி எழுதி வரும்போது அவைகளுக்கு முதலில் கொஞ்சமாவது விபரமாகச் சமாதானம் சொல்லாமல், எவ்விதம் பார்ப்பனர்கள் அவர்களின் புரட்டுகளை எடுத்துச்சொன்னால் "மதம் போச்சுது" "மத ஸ்தாபனம் போச்சுது" "நாஸ்திகத் தனம் ஆச்சுது" என்றுசொல்லுகிறார்களோ அதுபோல் படித்த கூட்டத்தார், பணக்காரக் கூட்டத்தார் ஆகியவர்களின் புரட்டுகளை எடுத்துச் சொன்னால் "தேசம் போச்சுது" "தேசிய ஸ்தாபனம் போச்சுது" 'தேசத்துரோகம் ஆச்சுது" என்று சொல்வதால் அதற்கு பயந்துகொண்டு உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டுகிறேன்.

"சமூக சமத்துவத்தையும் சுயமரியாதையும் சுதந்திரத்தையும் காங்கிரசின் மூலம் அடையாதபடி தென்னாட்டுப் பார்ப்பனர் செய்கிற கொடுமையை சகிக்கமுடியாமல் நாயக்கர் இம்மாதிரி எழுதுகிறார் அந்தி நாயக்கர் முன்னின்று பிரசாரம்செய்து இறைசென்று கவுரவப்படுத்திய காங்கிரஸ் மகாசபையை வேண்டுமென்று தூஷிப்பதாக நாம் நினைக்கவில்லை என்று 'தமிழ்நாடு' பத்திரிகை எழுதி இருக்கிறது

இந்த இடத்தில் தான்பொது ஜனங்கள் கொஞ்சம் நன்றாய் கவனம் செலுத்திப் பார்க்க வேண்டும். என்னவென்றால், நான் இப்போது காங்கிரசைக்கைப்பற்றி இருக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் செய்கையை மாத்திரம் கண்டிக்கவில்லை. மற்றும் காங்கிரசின் நடை முறைகளை மாத்திரம் நான் கண்டிக்கவில்லை. நான் கண்டிப்பது காங்கிரசின் அஸ்திவாரத்தையே, அதன் அடிப்படை தத்துவத்தையே கண்டிக்கிறேன். காங்கிரசை உண்டாக்கினவர்களே அவர்கள் யாராயிருக்கிறாலும் வெள்ளைக்காரர்கள் உள்பட உத்தியோகமும் அதிகாரமும் சம்பாதனை பெறவேண்டிய கூட்டத்தார்கள் என்றும், பெரிதும் அதே நோக்கத்தோடு ஏற்படுத்தி அது ஏற்பட்ட நாள் தொட்டு நாளது வரையும் அவர்கள் அதே காரியத்தில் வெற்றி பெற்றும் வந்திருக்கிறார்களே ஒழிய தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரம் இந்தக் காரியத்திற்கு முழுப் பெருப்பாளிகள் அல்ல என்பதையும் யாவரும் உணர வேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன் இந்த 40 வருடங்களாக காங்கிரஸ் பிரதிநிதிகள் யார்என்பதை கணக்குபோட்டுப் பாருங்கள். அதன் தலைவர்கள் யார் என்பதை குறிப்பிட்டுப் பாருங்கள். அதன் நிர்வாகி யாராயிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திப் பாருங்கள். இவர்களில் யாராவது இந்திய நாட்டின் 100க்கு 95வீ சமூகமக்கள் கூட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்களா? என்று யோசித்துப் பாருங்கள். இதுமாத்திரமல்ல இதுவரை காங்கிரஸில் செய்துவந்த தீர்மானங்களையும் அத்தீர்மானங்களின் பலனாய் ஏற்பட்ட சீர்திருத்தங்களையும் அதன் அனுபவங்களையும் ஒவ்வொன்றாய் உங்கள் சொந்த பகுத்தறிவை கொண்டு யோசித்துப்பாருங்கள். தேசத்தை காட்டிக் கொடுத்து வாழவேண்டியதான ஆங்கிலக் கல்வி கற்றவர்களும், தேசத்தைப்பாழாக்கி வாழ வேண்டியவர்களான வக்கீல்களும் கூலிக்காரர்களையும் தொழிலாளிகளையும் குடியானவர்களையும் விவசாயிகளையும் வதைத்து வாழவேண்டியவர்களான முதலாளிகளும் மிராசுதாரர்களுமே பிரதிநிதிகளாயுள்ள ஒரு கூட்டம் அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் 100-க்கு 90 பேர்களாயுள்ள அவர்களல்லாத மேல்கண்ட மக்களுக்கு எவ்விதத்தில் பிரதி

இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜித் சபையாரும்? பிரதிநிதி ஸ்தாபனமாகும்? என்று கேழ்க்கிறேன். இப்போது "இந்தியன்" [illegible]

[illegible]

வாங்கி கொடுத்தார்கள். சர் ஸி. பி. ராமசாமி அய்யர் காங்கிரஸ் காரியதரிசி ஆனார். இன்று அவரும் 5500 ரூ. சம்பளம் வாங்கிகொண்டு சமயல்காரப் பார்ப்பனர் மக்கள் பஞ்சாங்கப் பார்ப்பான் மக்கள் துருவப் பார்ப்பனர் மக்கள் வரையில் ஐகோர்ட் ஜட்ஜி ஜில்லா ஜட்ஜி, சப் ஜட்ஜி, சூப்பிரெண்டெண்ட் முதலிய பணம் கொளிக்கும் உத்தியோகங்கள் கொடுத்தார். ஸ்ரீரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ்காரியதரிசி ஆனார். அவர் தம்பி ஸ்ரீ 2000 ரூபாய் வாங்குகிறார். அவர் சுற்றத்தாகள். அது போலவே வாழ்கிறார்கள். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் காரியதரிசியானார். இப்போதும் அவர் பேரால் அவர் சிபார்சால் எத்தெத்த உருப்படிகளோ அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதும் கதர் இலாகாவில் வயிர் வளர்ப்பதுவுமாய் நடைபெற்று வருகிறது. இனியும் ஸ்ரீ நாயுடுவும் ஸ்ரீ கல்யாண சுந்திர முதலியாரும் பார்ப்பனரல்லர்தாரை காங்கிரஸில் சேர்த்து காங்கிரஸ்தலைமைப் பதவி பெற்று காங்கிரசை நடத்தினால் இதைவிட வேறு என்ன செய்து விட முடியும்? எல்லாவற்றையும் விட ஒன்று கேழ்க்கிறேன். மகாத்மா காந்திகாங்கிரசில் சேர்ந்து நானும் என்னைப்போன்ற ஆயிரக் கணக்கான ஊபத்தியக்காரர்களும் அவருக்கு சிஷ்யர்களாக இருக்கும் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் சிறை சென்றும் அதற்குத் தகுந்த என்ன காரியத்தைச் சாதிக்கமுடிந்தது? இங்குபதில் யாராவது சொல்லட்டும். பல கெடுதிகள் ஏற்பட்டது என்று சொல்லக்கூடியவர்களை தடுக்கக்கூட நமக்கு யோக்கியதை இல்லை. மேலும் அப்பத்திரிகை "நாயக்கரே காங்கிரசில் சேர்ந்து உழைத்து பிரசாரம் செய்து ஜெயிலுக்கும் போய் வந்துவிட்டு அதே காங்கிரசை தூஷிக்கிறா" என்று எழுதுகிறது. இது வாஸ்தவம். காங்கிரசைப்பற்றிய எனது பரீட்சை முடிந்துவிட்டது. தங்கள் தனது நாட்டிற்கு ஆக என்ன செய்யவேண்டுமென்று மகாத்மா சொன்னாரோ அவற்றை என்னால் கூடியவரை செய்துகாட்டினேன். மகாத்மா செய்துபார்த்துவிட்டார். எங்களது கொள்கைக்கு காங்கிரசை உபயோகப் படுத்திப் பார்த்தோம். கன்னியமாக [illegible]

ண்டு நம் நாட்டை விடுதலை செய்விக்க முடியாது அது விடுதலைக்கான ஸ்தாபனமல்ல அடிமைத்தன்மைக்கு ஆன ஸ்தாபனம்தான் என்பதாக தீர்மானித்து ஆய்விட்டது ஆதலால் அதை ஒழிக்க வேண்டியது நாட்டின் விடுதலையை எதிர்பார்ப்பவன் கடமை என்கிற முடிவுக்கு வந்துவிட்டேன். காங்கிரஸ் ஒழிந்த மறுதினமே மகாத்மாவை சத்தியாக்கிரக உலகத்தில் காணலாம். விடுதலை உலகத்தில் காணலாம். இது உறுதி என்று சொல்லுவேன். மகாத்மாகாங்கிரசை விட்டுவிலகும்போது என்ன சொன்னார்? என்பதை கவனியுங்கள். எனது நாட்டின் விடுதலைக்கு ஏற்ற கொள்கைகளை படித்த வகுப்பாரை ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு ஏற்ற ஆற்றலை கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. ஆதலால் எனது கொள்கைகளை காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலக்கிக் கொள்ளுகிறேன். என்னாலானதை நான் வெளியில் செய்து பார்க்கிறேன் என்று சொன்னதை ஸ்ரீமான்கள் நாயுடுவும் முதலியாரும் ஒப்புக் கொள்ளுகிறார்களா? ஆக்ஷேபிக்கிறார்களா? என்று கேழ்க்கிறேன்.

மகாத்மாவினால் திருப்தி செய்விக்க முடியாத படித்தவர்களது ஸ்தாபனமான பணம் சம்பாதிக்கும் காங்கிரசை ஸ்ரீமான்கள் நாயுடுகாரும் முதலியாரும் கைப்பற்றி மகாத்மா கொள்கைகளை அப்படி படித்தவர்களுள் புகுத்தி காங்கிரசின் மூலம் விடுதலை சம்பாதித்து கொடுக்கப்போகிறார்களா? என்று கேழ்க்கிறேன் ஒருக்கால்ஸ்ரீமான்நாயுடுவும் முதலியாரும் ஒப்புக்கொள்வதனாலும் வாசகர்களே நீங்கள் முடியும் என்று நம்புகிறீர்களா என்று கேட்கிறேன். தவிரவும் அப்பத்திரிகை எழுதுவதாவது சரித்திர ஆராய்ச்சியும் பிரதேச சுதந்தரக் கிளர்ச்சியின் அநுபோகமும் எனக்குஇல்லாததால் நான் இப்படி சொல்லுவதாய் மிகவும் தாட்சண்ணியமான பாஷையில் எழுதி இருக்கிறது. பாஷையில் தாட்சண்ணியம் காட்டியதைப் பொருத்தவரை நான் நன்றிதலுள்ளவனாக இருக்கிறேன்.

கருத்தைப் பொருத்த வரையிலும் மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இதற்கு ஆக ஒரு சிறு கதை சொல்லுகிறேன். ஒரு ஊரில் ஒருவன் வீட்டில் அவனது தாயார் இறந்துவிட்டாள், அதற்கு துக்கம் விசாரிக்கப் போனவர்கள் அச்சிறுவனைப்பார்த்து உன்தாயார் இறந்து போனதைப்பற்றி எங்களுக்கு மிகவும் துக்கமாக இருக்கிறது அந்தம்மாள் உனக்கு மாத்திரம் தாயரல்லஎனக்கும் தயாராயிருந்தாள். இந்த வீதிக்கே மற்றும் ஊருக்கே தாயாராயிருந்தாள். அப்பேற்பட்ட புண்ணியவதி போய்விட்டாளேஎன்று மிகவும் வருத்தப் படுகிறோம் என்று ஆறுதல் சொன்னார்கள். அடுத்த வாரத்தில் பக்கத்து வீட்டிலுள்ள ஒருவரின் மனைவி இறந்துவிட்டாள் இந்த வாலிபன் அந்தண்பர் வீட்டிற்கு துக்கத்தை விசாரிப்பதற்குசென்றவன் விசாரிக்கும்முறைஇப்படிதானுக்கும்என் றுநினைத்துக்கொண்டுவீட்டுக்காரரைபார்த்து "ஐயோ உன் மனைவி இறந்துவிட்டதைப்பற்றி நான் மிகவும் துக்கப்படுகிறேன் அப்புண்யவதி உனக்குமாத்திரமா மனைவி என்று இருக்கிறாயா? எனக்கும் மனைவியாயிருந்தாள், இந்த வீதியிலுள்ள எல்லாருக்கும் மனைவியாயிருந்தாள்; இந்த ஊராரிலும் யாருக்கு வேண்டுமானாலும் மனைவியாயிருந்தாள் அப்பேர்பட்ட தர்மவதி இறந்துபோனதற்கு நான் மாத்திரமல்ல இந்த ஊரார் எல்லோரும் துக்கப்படுகிறார்கள்" என்னு சொன்னாலும் அது போல இருக்கிறது. உலகத்திலுள்ள மற்ற தேசக் கிளர்ச்சியை நமது இந்திய நாட்டுக்கு ஒப்பிட்டு அச்சரித்திரங்களின் படிப்பும் கிளர்ச்சிகளின, படிப்புக் இன்நாட்டில் நடத்த எத்தனிப்பது உலகத்திலுள்ள மற்ற தேசம் எல்லாம் வேறு. இந்தியா வேறு. அதனாலே தான் "தமிழ் நாடு" பத்திரிகை சொல்வதுபோன்ற அயல் நாட்டுச் சரித்திரங்களையும் கிளர்ச்சியையும் மற்றவர்கள் யாருக்கும் பின்வாங்காத அளவுக்கு படித்தறிந்த மகாத்மா காந்தி இந்நாட்டு விடுதலைக்கு அவைகள் எதையும் உபயோகித்துக் கொள்ளாமல் தன் சொந்த முறையில் ஒரு தத்துவத்தைப் புகுத்தினார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுவதுடன் அயல் நாட்டு விடுதலை சரித்திரமும் கிளர்ச்சி மாதிரியும் நமது நாட்டுக்கு உதவாது என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் அப்பத்திரிகை எழுதி இருப்பதாவது "நாயக்கர், வரி உயர்ந்ததும் பார்ப்பனரல்லாதார் நன்மை கெட்டு பார்ப்பனர் ஆதிக்கம் வலுத்ததும் தொழிலாளர் நிலைமை கேவலப்பட்டதும், இன்னும் பல குறைகளுக்கும் காங்கிரசே காரணமென்று சொல்லுகிறார், இது சரியல்ல. மற்றதேசங்கள் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தின் மூலம் தான் வெற்றி பெற்று இருக்கிறது. காலத்திற்கு ஏற்றபடியும் தேவைக்குத்தக்கபடியும் எல்லாதேசத்திலும் தான்உயர்ந்திருக்கிறது. ஆதலால் இவற்றிற்கு காங்கிரஸ் காரணமல்ல" என்று எழுதியிருக்கிறது. இதற்கும் முன் சொன்ன துக்கம் விசாரிப்பு கதையையே சமாதானமாக சொல்ல வேண்டி [illegible]

இருப்பதற்கு வருந்துவது[illegible]மலும் இரண்டொரு சமாதானம் சொல்லுகிறேன்,

நமது அரசாங்கத்தார் உ[illegible]யிருக்கும் வரிகால தேச வர்த்[illegible] அதிச்செலவை உத்தேசித்தா? அல்லது காங்கிரசுக்கு அழுக வேண்டிய சில உத்தியோகங்களை உத்தேசித்தா?என்பதையும் நமது நாட்டு அரசாட்சிக்கு இவ்வளவு உத்தியோகம் வேண்டுமோ? என்பதையும் மற்ற தேச உத்தியோகங்களுக்குஇவ்வளவு சம்பள மிருக்கிறதா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

ஒரு கவர்னரும் இரண்டு நிர்வாக சபை மெம்பர்களும் இரண்டு காரியதரிசியும் அரசாட்சி புரிந்த சென்னை அரசாங்கத்திற்கு ஒரு கவர்னரும் 7 நிர்வாக அங்கத்தினர்களும் 7 காரியதரிசிகளும் எதற்காக? இது கால தேச வர்த்தமானத்தை உத்தேசித்தா காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா? என்பதை கண்ணியமாய் சொல்லட்டும். 5 ஐகோர்ட்டு ஜட்ஜிகள் இருந்து நியாயம் விளங்கின சென்னை உயர்தரநீதிமன்றத்திற்கு15ஹைகோர்ட்ஜட்ஜிகள்இருப்பதுகாலதேச வர்த்தமானத்தை உத்தேசித்தா? காங்கிரசின் தேசத்துரோகத்தை உத்தேசித்தா?

ஸ்ரீமான்கள் சர், ஸி. பி. ராமசாமிக்கும் சர் சிவஞானத்திற்கும் டாக்டர் சுப்பராயனுக்கும் மற்றும் இவர்கள் போன்றோருக்கும்மாதம் 550 ரூ கொடுப்பதும்காரியதரிசிகளுக்கும் ஜட்ஜுகளுக்கும்2500.3000 கொடுப்பதும்காலதேசவர்த்தமானத்தைஉத்தேசித்தா?காங்கிரஸின் தேசத்துரோகத்தைஉத்தேசித்தா? இதுபோன்ற ஆயிரக்கணக்கானஉத்தியோகங்கள் அதிகமானதும் அதிகளுக்கு சம்பளம் கொடுக்கவேண்டியதும் நாட்டின் உண்மையின் அவசியத்தை முன்னிட்டா? இவர்களுக்கு இவர்களைப்போலவே வெள்ளைக்காரரும் அதிகச்சம்பளம் கொடுக்கவேண்டியதற்காகவே 10கோடி ரூபா வரி செலுத்திவந்த நமது நாட்டு குடியானவர்கள் வியாபாரிகள் தொழிலாளிகள் கள்ளு சாராயம் குடிக்கவேண்டியவர்களை அகப்படுத்த அவசியங்கள் ஆகியவரிகள் கார்ட், கவர், ரயில் சார்ஜ் உப்புவருமான வரி சாமான்கள்மீது முதலிய வரி முதலியதுகளை அதிகமாக ஏற்பட்டதா அல்லது தேசத்தின் காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஏற்பட்டதா என்று கேழ்க்கின்றேன்,

தூங்குபவர்களை தட்டியெழுப்பலாம் 'தமிழ்நாடு'போன்ற எல்லா விபரமும் தெரிந்தவேண்டுமென்றே கண்ணை கெட்டியாய் மூடிப்படுத்துக்கொண்டிருப்பவர்களை எப்படி எழுப்புவது?

மற்றும் அப்பத்திரிகை எழுதுவதாவது "காங்கிரஸ் தோன்றிய பிறகு தான் மக்களுக்கு தேசாபிமானம் இன்னது என்று தெரிந்தது. சீர்திருத்தங்களைப் படிப்படியாய் அடைய முடிந்தது. அடைந்ததை ஆள முடிந்தது. தேச சமூக சமயவேத புராண புரோகித விடுதலைகளில் உணர்ச்சி ஏற்பட்டது" என்று எழுதுகிறது.

இதில் மருந்துக்குக்கூட உண்மை இல்லை. காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு தான் மக்களுக்கு தேசத் துரோகம் செய்யும் ஆசை கற்பிக்கப்பட்டது தேசத்துரோகம் செய்து வாழ வேண்டிய அவசியமே மக்களுக்கு ஏற்பட்டது. காங்கிரசுக்கு முன் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் அதுவும் மிகுதியாக பார்ப்பன உத்தியோகஸ்தர் மாத்திரம் செய்ய முடிந்தது இப்போது மக்கள் ஒவ்வொருவரும் வாழ வேண்டுமானாலும் சிறப்பாக அயோக்கியர்கள் வாழவேண்டுமானாலும் உத்தியோகங்களைவிட காங்கிரசு தான் தக்க இடமாக இருந்து வருகிறது. சமயசமூகவாரிகள் விடுதலைக்கு நமது நாடு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் போராடுகிறது. அது வெற்றி பெறும் நாளையில் காங்கிரசின் பலனாய் பார்ப்பன ஆதிக்கம் வளர்ந்து அவ்விடுதலைகளுக்கு இடையூறாய் நிற்கிறது. இன்றும் இவ்விடுதலைக்கு காங்கிரசின்பேரால்உழைக்க இடமிருக்கிறதா?என்று கேழ்க்கிறேன். காங்கிரசால் வந்த சீர்திருத்தத்தை தானே நம் நாட்டுக்கு ஆபத்து என்று சொல்லுகிறேன் அது வந்ததால் கெடுதிதானே ஆயிற்று. சீர்திருத்தத்தை நடத்திக்காட்ட முடிந்தது என்கிறது. எதை நடத்திக்காட்டியதாக அப்பத்திரிகை சொல்லுகிறது. என்பது நமக்கு விளங்கவில்லை மந்திரிபதவிகளில் டாக்டர்சுப்பராயன், பனக்கால் ராஜா, முதலியவர்கள் நடத்திகாட்டியதையா தேர்தல்களில் சீனிவாசய்யங்கார் நடத்திக்காட்டியதையா? இந்தியருக்கு உயர் பதவி கொடுத்ததில் சர். ஸி. பி. நடத்திக் காட்டியதையா? ஸ்தல ஸ்தாபனங்களில் ஸ்ரீமான் ஈரோடு டி. ஸ்ரீனிவாச முதலியார் நடத்திக் காட்டியதா? கூட்டுத் தொகுதியில் இந்திய சட்டசபைக்கு தென்னாட்டில் அய்யங்கார்களே போக முடிந்ததையா? எதைச் சொல்லுகிறது! என்று கேட்கிறேன். இது போலவே அதன் மற்ற வரிகளும் இருக்ின்றன. மற்றவைகளுக்கும் பதில் விரும்பினால் வரிவரியாய் பிரித்து எழுதத் தயாராயிருக்கிறேன்.

ஒற்றுமையை உத்தேசித்து கொள்கைகளை விட்டுக்கொடுத்த பலன்தான் மகாத்மா மூக்காடிட்டு சங்கராசாரி போல் மூலையில் உட்கார நேர்ந்ததும் அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதிகள் சம்பரதாயம் போல் ஆனதும் மடங்களில் பலர் ஆஷாடபூதித்தனம் செய்து பெருமை அடைவதுபோல் காந்தி மடத்திலும் பல 'சாஸ்திரிகள்' போய் அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமை பெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்திகொள்கைக்குஇருந்த மதிப்புகள் அடியோடு போய் காந்தி மடமேற்பட்டு விட்டதற்கு காரணமே கொள்கையை விட்டுகொடுத்து ஒற்றுமையை நாடின பயித்தியக்காரத்தனம்தான் மகான்கள் செயலில் பைத்தியக்காரத்தனமும் ஒன்றுதலால் மகாத்மாகாந்திக்கு அதுதகும். ஒரு சமயம்அதை மாற்றிக்கொள்ள அவருக்கு நம்பிக்கைபிறந்தாலும்பிறக்கும்நமக்கு தகாது நமக்கு அந் நம்பிக்கை இல்லை கொள்கைவிட்டு ராஜியான ஒரு ஸ்தாபனமும் ஒரு மனிதனும் ஒருநாளும் உருப்படியானது என்பது எனதுபுத்திக்கு எட்டிய உறுதியான முடிவு.

ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் "காங்கிரஸ்" பைத்தியம் இருப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது ஸ்ரீ முதலியாருக்கு அரசியல் விளம்பரம் தேவையில்லை. ஆங்கிலம் படித்த பயனாக தேசத்துரோகத் தன்மை தோன்றவும் இடமில்லை. வேறு விதத்தில் அவர் ஒரு பெரிய ராஜ தந்திரியாக வேண்டியதவசியமும் இல்லை. ஆதலால் அவருக்கு "காங்கிரஸ்" பைத்தியம் ஏனோ தெரியவில்லை. எப்படியானாலும் "காங்கிரஸ்" தேசத்துரோக ஸ்தாபனமென்பதையும், ஏழைகளை வதைக்கும் ஸ்தாபனம் என்பதையும் நாம்கோபுரத்தின் மேலிருந்து கூவுவோம். ஆனால், கடைசியாக ஒரு வார்த்தை அதாவது யாவரொருவர் "காங்கிரசைப்பற்றி என்னைப் போல் நினைக்கிறார்களோ, என்னைப் போன்ற முடிவை உறுதியாகக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரம் 'காங்கிரசில் சேர வேண்டியதில்லை. ஸ்ரீமான் நாயுடுவைப் போலவும் முதலியாரைப் போலவும், மற்றும் 'ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள சிலர்கள் போலவும் 'காங்கிரஸ் ஒருதேசியசபைஅதனால் தேசத்திற்கு நன்மை செய்யலாம் என்று யாராவது நினைப்பார்களே ஆனால் அவர்கள் அவசியம் தங்கள் மனசாட்சிப்படியே நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், மனதில் உண்மை தெரிந்து சுயநலத்திற்காகவோ வாழ்வுக்காகவோ போய் சேர்ந்து தேசத்தையும் ஏழைமக்களையும் கெடுக்காதீர்கள் என்று பிரார்த்திக்கிறேன்.

"குடி அரசு"

கவனியுங்கள்! — வணியுங்கள்!!

வெளியூர் வாசிகளுக்கு ஒரு நல்ல தருணம்.

வியாபார உலகத்தில் ஒரு நூதனமுறை.

வெளியூர் வாசிகள் இனி ஏமாறவேண்டிய அவசியமில்லை.

உயர்ந்த தரம் — குறைந்த விலை

நூதனமுறை.

சென்னையிலிருந்து தங்களுக்கு என்ன சாமான்கள் வேண்டுமானாலும் எங்களுக்கே எழுதுங்கள்.

எங்கள் நூதனமுறையைத் தெரிந்துகொள்ள உடனே ஒரு கார்டு எழுதுங்கள்.

விலாசம்:—

வெளியூர் வர்த்தகசாலை,

62-A. அவதானம் பாப்பையர் தெரு,

வேப்பேரி போஸ்டு,

சென்னை.

113.

பம்பாய்.

—:o:—

ஸ்ரீ செல்வவிநாயக செந்தமிழ் வாசகசாலை.

1927ம் வருஷம் மே மாதம் 31ந் தேதி செவ்வாய்க் கிழமை இரவு 9-30 மணிக்கு இரண்டாவது வருட 5வது மாதாந்தரக் கூட்டம் கனம் வி. என். தென்கரை மகாராஜா அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் நடைபெற்றது. அன்று 13 அங்கத்தினர்களும் மற்றும் சிலரும் விஜயஞ் செய்திருந்தனர்.

முதலாவதாக—கடவுள் வணக்கம் திரு. எல். எ. ஐயாசாமி அவர்களால் நன்கு பாடப்பட்டு முடிந்ததும் கூட்டத்தின் வர்த்தமானங்களை காரியதரிசியால் வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

பின் கனம் எம். எஸ். ஆதிசிவமவர்கள் கடிதமும் கனம் எஸ். பி. சந்தனராஜ் அவர்கள் கடிதமும் காரியதரிசியால் வாசித்து காண்பிக்கப்பட்டது.

வாசக சாலையின் க்ஷேம நிதிக்காக உண்டியல் மூலமாக கனம் பிரசிடெண்ட் அவர்கள் வசூலித்தது ரூ 2. பீடிக்கடை வர்த்தகரான கனம் எஸ். வி. ஆதிமூத்து அவர்கள் வசூலித்த ரூ 1-4-0. வாசகசாலையால் வந்தது அணா 4. ஆகமொத்தம் 3-8-0 இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொள்ளும் மேற்கண்டவர்களுக்கு வாசகசாலையின் நன்றியறிதலை காரியதரிசியால் கூறிக்கொள்ளப்பட்டது.

அதன்பின் நமது மெம்பரிலொருவரான கனம் ஆர். எ. சிவன் அவர்கள் தனது தந்தையின் மரணத்தைக் குறித்து சுயதேசம் திடீரென்று சென்றுவிட்டதால் வாசகசாலையின் அனுதாபத்தை அன்னாருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆறுதலைக் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்வதாக காரியதரிசி கூறினார்,

பின், கனம், உப பொக்கிஷதாரரவர்களால் "ஆலய வழிபாடு" யென்பது பற்றி சரிகை, கிரியை, யோகம் ஞானம் பசுபதிபாசம் என்பதையும், கண்ணப்பர் தெய்வ வழிபாடு செய்ததையும் இரண்டு சிறுவர்கள் தாசி வீட்டுக்கும் கோவிலுக்கும் சென்றதும், தெய்வப் பெயர்களென்று பேய் பிசாசுகளின் இழிவான பெயரிவேதும்முதலிய பல கருத்துக்களடங்க சாந்தமான நடையில் மிகவும் இனிமையாக ஓர் உபந்நியாசச் சுருக்கம் செய்தனர்,

(கரகோஷம்)

பின் கனம் எஸ். பெரியஸ்வாமி அவர்களால் "ஊக்கம்" யென்பதுபற்றி ஊக்கமென்பதென்ன? எவ்விதமான ஊக்கம் நமக்குள்ளிருக்கவேண்டும்? அதை எவ்வாறு கடைபிடிப்பது? ஊக்கத்தால் அடையும் பயன் யென்பது பற்றி மிகவும் உருக்கமாகயாவருக்கும் விரும்பத்தக்கவாறு சில நிமிஷங்கள் பேசியமர்ந்தனர், (கரகோஷம்)

இலங்கை "சமத்துவ ஊழியன்" நிதி விஷயமாக 1 3-27 "நமது வேண்டுகோளின்படி இதுவரையில் வசூலான தொகை ரூ10. வாசக சாலையின் கஷ்ட நிலைமையைக் கருதி (28-2-27)யில் தீர்மானித்தப்படி நம்மிடமிருந்து வாசகசாலையின் பேரால் ரூ 5. ஆகமொத்தம் ரூ 15. அனுப்பிவிட வேண்டுமென்றும் தீர்மானித்து உறுதி செய்யப்பட்டது. (அவ்விதமே 2-6-27ல் ரூ 15 ஷை பத்திராதிபரவர்களுக்கு மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்றது.)

பின், கனம் பொக்கிஷதாரரவர்களால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டதில் கட்டண வரவு மொத்தம் ரூ. 29-15-10. இதில் பாங்கில் இருப்புச் செய்தது ரூ 7. மற்றும் செலவு ரூ. 26-14-0 போக மீதி ரூ 3-1-10 என்ற செலவு விபரத்துடன் வாசித்துக் காண்பிக்கப்பட்டதை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இறுதியில் கனம் அக்கிராசனரவர்களால் முடிவுரையாக மேற்கண்ட விஷயங்களைத் தழுவிபேசியதுடன் இல்லறம் பெரிதா? துறவறம்பெரிதா? யென்பதும், அரசனும் சந்நியாசிக் கதையை தாரணமாகக் கொண்டு மிக கம்பீரமாகவும் நன்கு மனதில் பதியும் வண்ணமும் சுமார் அரைமணி நேரமாக யாவரும் பரவசமடைய பேசியமர கரகோஷம் செய்விக்கப்பட்டது.

பின் கடவுள் வணக்கம் கனம் பொக்கிஷதாரரவர்களால் செய்யப்பட்டு தாம்பூல பரிமாறியதும் கூட்டம் நன்கு கலைவுற்றது. என்று எஸ். டி. சவரிதாசன். எழுதுகின்றார்.

பார்ப்பனர்களுக்கு இடம் வேறு,உங்களுக்கு இடம் வேறு என்ற வித்தியாசம் இருக்கிற காபி, சாப்பாடு ஓட்டல்களுக்குப் போகாதீர்கள்.

குடி அரசு.

ஒரு சிறந்த வாரப்பத்திரிகை.

ஈரோடினின்றும் வெளிவருவது.

ஆசிரியர்.—

திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

இது பிராமணரல்லாதாரின்
விடுதலைக்கு உழைப்பது.

சந்தா முன்பணம் (வருடம்)	ரூ 3—0—0
6 மாத சந்தா	ரூ 1—12—0
வெளிநாடு (வருடம்)	ரூ 4—0—0

"திராவிடன்" சந்தா.

சென்னையிலும் நம் ஏஜண்டு உள்ள இடங்களிலும்

மாதமொன்றுக்கு ரூபாய்	1 0 0
தனிபிரதி	0 0 6
மற்ற இடங்களில்	1 6 0
தனிபிரதி	0 1 0
வெளிநாடுகளுக்கு	1 12 0
தனிபிரதி	0 1 5

ஆகலான்
எல்லோரும் சந்தாதாராய்ச் சேருங்கள்.

சந்தா முன்பணம் கட்டி பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டியது.

பார்ப்பனரல்லாத காப்பி ஓட்டல்களை ஏற்படுத்துங்கள். அதற்குத்தகுந்த முறையில் வாலிபர்களைப் பயிற்சி செய்யுங்கள்.

தர்ப்பை புல்லுக்குத் தாகு கொடுத்தால் இறந்தவர்கள் மோட்சலோகம் போய் சேருவார்கள் என்ற மூடநம்பிக்கையை ஒழியுங்கள்! ஒழியுங்கள்!!

சுயராஜ்யத்துக்கு வழியாது?

சுயமரியாதையே

அதன் கொள்கைகள்

1. நம்மை எல்லோரையும் படைத்த கடவுள் ஒருவரே.
2. நாமெல்லோரும் சகோதரர்கள்
3. கோவில்களில் எல்லோரும் சேர்ந்து கடவுளை வழி படுங்கள்.
4. சாதி வித்தியாசத்தை ஒழியுங்கள்.
5. சகோதரர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுங்கள்.
6. சம்பந்தி போஜனமே சமத்துவத்திற்கு வழி.
7. சமத்துவமே சுயராஜ்யம்.
8. கடவுளுக்கும் நமக்கும் தரகர் வேண்டாம்.
9. நீங்களே தேங்காய் உடைத்து பழம்வைத்து கற்பூரஆராதனை செய்யுங்கள்.
10. அடிமைப் புத்தியை ஒழியுங்கள். மனோ விடுதலை அடையுங்கள். தேசத்தைவிடுதலை செய்யுங்கள்.
11. தர்ப்பை புல்லிற்கு தாகு கொடுத்தால், இறந்தவர்கள் மோட்சலோகம் போவார்களென்ற மூட நம்பிக்கையை ஒழியுங்கள்.
12. உங்களுக்கு இறந்தவர்களிடத்தில் அனுதாபமிருந்தால் உங்களைச் சேர்ந்தபந்துக்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும் விருந்திடுங்கள்;
13. கல்யாண சுப துக்க காரியங்களுக்கு பிராமணியத்தை முற்றும் ஒழியுங்கள்! உங்களைச்சேர்ந்த பெரியோர்களைவைத்து நடத்துங்கள் வீண் டம்பச்செலவு செய்யாதீர்கள்.
14. நீங்கள் கட்டிவைத்த கோவில்களில் கடவுள் விக்கிரகங்களை அருகில் போய்ப்பார்க்க உங்களுக்கு உரிமையில்லையா?
15. சூத்திரன் என்றால் அடிமை. அடிமைத்தனத்தை ஒழிப்பதுதான் உங்களுடையசுயமரியாதை.
16. பார்ப்பனர்களுக்கு இடம்வேறு, உங்களுக்கு இடம்வேறு என்ற வித்தியாசமிருக்கிற காப்பி, சாப்பாடு ஓட்டல்களுக்குப் போகாதீர்கள்.
17. பார்ப்பனரல்லாத இந்து, மகமதிய, கிருஸ்தவ சகோதரர்கள் ஓட்டல்களில் ஒன்றாயிருந்து ஒற்றுமையுடன் சாப்பிட பார்ப்பனர்களுக்கு மட்டும் தனி இடம் ஏன்?
18. உங்களை எந்த ஓட்டல்களில் சமத்துவமாய் நடத்துகிறார்களோ அந்த ஓட்டல்களுக்குச் செல்லுங்கள்.
19. பார்ப்பனரல்லாதார் ஓட்டல்களை ஏற்படுத்துங்கள். அதற்கு தகுந்த முறையில் வாலிபர்களைப் பயிற்சி செய்யுங்கள்.
20. தீண்டாமையென்ற பேயை நமது தேசத்தை விட்டுத்துரத்துங்கள்.
21. வீதியிற்செல்ல நாய், பன்றிகளுக்கு உரிமை யிருக்கும்பொழுது நமது மானிட சகோதரர்களுக்கில்லையா?
22. தண்ணீர்ப் பந்தல்களில் எல்லாசகோதரர்களுக்கும் பாத்திரத்தில் தண்ணீர் கொடுங்கள். கையிலாவது மூங்கில் குழாய்கள் வழியாவது தண்ணீர் வார்ப்பதை நிறுத்துங்கள்.
23. கோவில்களில் எல்லோருக்கும் சமத்துவமாக பிரசாதங்களை வழங்குங்கள். சிலவகுப்பினர்களுக்கு முன்னும் சிலவகுப்பினர்களுக்கு பின்னும், சிலவகுப்பினர்களை உட்காரவைத்தும், சிலவகுப்பினர்களை நிற்கவைத்து பிரசாதம் கொடுப்பதை நிறுத்துங்கள்.
24. ஆலயங்களில் தேவாரம், திருவாசகங்களை சதா பக்தர்கள் காதுகளில் கேட்கும்படி செய்யுங்கள்.
25. உங்களுடைய சுயமரியாதைக்கு போராடுகின்ற "குடி அரசு", "திராவிடன்" "ஜஸ்டிஸ்" போன்ற பத்திரிகைகளை வாங்கிப்படியுங்கள்.

... for the S. I. P. Association Ltd, "Justice Printing Works" General Patter's Road, Royapettah, Mount Road, Madras.